IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 40/2020

Deposition of Witness : PW 2

Name : குமரவேல்

Father's Name /W/o : த/பெ. கிருஷ்டப்ப ரெட்டியார்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : நாகவேடு கிராமம், நெமிலி வட்டம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 30.10.2023

குறுக்கு விசாரணை.

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் உடல்நிலை சரியில்லாததால் வீட்டில் தான் இருக்கிறேன். வழக்கு பற்றி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் பெயரில் வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் முருகன் என்பவர் , சுமதி, சுப்பிரமணி வாரிசுகள் மீது தாக்கல் செய்துள்ளார். சாட்சியம் சொல்ல யார் அழைத்தது என்றால் முருகன் சொல்லி வந்தேன். முருகனை எப்படி தெரியும் என்றால் என் ஊர்க்காரர் பக்கத்து தெரு. வழக்கு சொத்து என் கிராமத்தில் உள்ளது என்றால் ஆம். வழக்கு சொத்திற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் கால் பர்ளாங் இருக்கும். வாதி என்ன காரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் தந்தை வாங்கிய சொத்தை அபகரிப்பு செய்துள்ளதால் வழக்கை தாக்கல் செய்துள்ளார். முருகன் வீட்டு விசேஷங்களுக்கு என்னை அழைப்பாரா என்றால் ஆம். முருகன் தந்தை 1975 ல் சொத்தை கிரையம் வாங்கியதாக பிரமாணவாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் ஆம். அதில் நான் சாட்சி கையெழுத்து

போட்டேனா என்றால் இல்லை. பத்திரத்தை என்னிடம் படித்துக்காட்ட காட்டினார்.

2. வாதி மாவட்ட வருவாய் ஆய்வாளரிடம் மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதில் விசாரணைக்கு எனக்கும் அழைப்பு வந்ததா என்றால் வந்தது. விசாரணைக்கு ஆஜராக என் தரப்பு ஆவணங்களை கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். விசாரணையில் என்ன முடிவு சொன்னார்கள் என்றால் முடிவு சொல்லவில்லை. அதனால் தான் வழக்கறிஞர் வைத்து வழக்கு போட்டோம். எதனால் முடிவு சொல்லவில்லை என்ற விவரம் கேட்டேனா என்றால் இல்லை. காலமாகிவிட்டதால் வழக்கு போட்டுவிட்டுடோம். வழக்கு தாக்கல் செய்த பிறகு முடிவு வந்ததா என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)